3. மாண்புமிகு பேரவை முன்னவர்.

4. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

6. திரு. ஆர். மணிமாறன், தலைமை அரசு கொறடா.

7. திரு. மு. கருணாநிதி, எதிர்க்கட்சித் தலைவர்.

8. திரு. க. அன்பழகன்.

9. திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப்,

10. திரு. என். சங்கரய்யா.

11. திரு. சோ. அழகர்சாமி.

12. திரு. குமரி அனந்தன்.

13. திரு. ப. நெடுமாறன்.

14. திரு. எஸ். ஆண்டித்தேவர்.

15. திரு. பி. முகமது இஸ்மாயில்.

16. திரு. கி. சட்டநாத கரையாளர்.

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக் குழுவின் தலைவர் ஆவார்.

(பிற்பகல் 12-30)

5. தகவல் கோரல்.

வினா-விடை நேரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து வினாக்களுக்கான அறிவிப்புகள் வந்து, அவை அனுமதிக்கப்பட்டு, துறைகளுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றன. விடைகள் வருவதற்குக் காலதாமதம் ஆகும். காலையிலே வினா-விடை நேரம் 9 மணியிலிருந்து 10 மணி வரை இருப்பது வழக்கம். நாளை மறுதினத்திலிருந்து வினா-விடை நேரம் தேவையில்லை. கொஞ்ச காலம் கழித்து, வினா-விடை நேரம் வைத்துக்கொள்ளலாமா என்பதைப்பற்றி, இங்குள்ள கட்சிகளின் தலைவர்களுடைய கருத்துக்களை அறிய விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத் : வினாக்களைப் பொறுத்தவரைக்கும், முறைப்படி யான ப்ரொசீஜர்படி விடைகள் வர பல நாட்கள் ஆகும் என்றாலும், அதன் காரணமாக, சுத்தமாக வினா-விடை நேரம் இல்லாமல் இருப்பது சரியல்ல. ஆகவே, நான் சஜஸ்ட் செய்வது, குறுகிய கால வினாக்களை அங்கத்தினர்கள் கொடுத்தால், அதை அமைச்சர்களும் ஒத்துக்கொள்வதாக இருந்தால், உடனுக்குடன் பதில் சொல்வதாக இருந்தால், இந்த செஷனிலேயே ஷார்ட் நோட்டீஸ் கொண்டு வந்து விடைகளைப் பெறலாம். ஆகவே, அந்த ஒரு மணி நேரத்தை சுத்தமாக எடுக்க வேண்டாமென்று நான் சஜஸ்ட் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினா என்று பெயரே தவிர, விடை வர 3 நாட்கள் ஆகிவிடுகிறது.

திரு. ரா. உமாநாத் : அதற்கு சட்டப்படியே 7 நாட்கள் என்று இருக் கிறது. ஆனால், கனம் அமைச்சர்கள் ஒத்துழைத்தால், நிச்சயமாக சில வினாக்களுக்கு உடனடியாகப் பதில் கொடுக்க முடியும். அந்த முறையிலே அமைச்சர்கள் ஒத்துழைப்பையும் நான் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, கேள்வி நேரம் என்பது நம்முடைய நிகழ்ச்சி நிரலிலே இருக் கட்டும். ஒன்றோ, இரண்டோ கேள்விகள் வந்தால், பதில் சொல்லிவிட்டு, மீதி நேரத்தை, கவர்னர் உரை மீதான விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம். எனவே, கேள்வி நேரம் என்று இருக்கட்டும். கேள்விகள் எவ்வளவு வருகின் றனவோ, அவற்றிற்குப் பதில் சொல்வோம். மீதி நேரத்தை நம்முடைய நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பிற காரியங்களுக்கு நாம் பயன்படுத்தலாம்.

திரு. துரைமுருகன் : சார், இப்பொழுதே பல கேள்விகளைக் கொடுத் திருக்கிறோம். இன்றைக்கு சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிழமை. எனவே, அந்தக் கேள்விகளுக்கு, நண்பர் உமாநாத் சொன்னதைப் போல், திங்கள் செவ்வாயிலே விடை வந்துவிடலாம். ஆகவே, கூடுமானவரையிலே, நம் முடைய தலைவர் சொன்னதைப் போல், ஒரு கேள்விக்கு 3 நாளிலே பதில் கிடைத்து விடலாம். இந்தியா பூராவுக்கும் பார்லிமெண்டிலே அரை மணி நேரத்திலே பதில் கொடுத்து விடும்போது, பார்லிமெண்டிலே இருந்த உங்களுக்கு இது தெரியாதது அல்ல. ஆகையினால் . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர் களே, இந்த இரண்டு மூன்று நாள் என்று நம்மை நாமே கட்டுப்படுத்திக்கொள் வது சரியல்ல. எவ்வளவு விரைவாகப் பதில் சொல்ல முடியுமோ அவ்வளவு விரைவாகப் பதில் சொல்லலாம்.

1980 ஜூன் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தை செவ்வாய்க்கிழமை யிலேயிருந்து வைத்துக் கொள்ளலாமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : கேள்வி நேரம் என்று போட்டு விடுங்கள். கேள்வி வரவில்லையென்றால், அதை விட்டுவிட்டு வேறு அலுவல்களைப் பார்ப்போம். திங்கட்கிழமை மட்டும் 10 மணி என்று வைத்துக்கொள்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் உரைக்காக இன்று மாலை 4 மணிக்குப் பேரவையும் மேலவையும் சேர்ந்த கூட்டுக் கூட்டம் நடைபெறும் என்பதை நினைவுபடுத்துகிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் 23—6—1980, திங்கட்கிழமை காலை 10 மணிக்குக் கூடும். அதற்குப் பிறகு பேரவை வழக்கப்படி 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-34 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.**

ஏதுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS